என்பதற்காக. ஆகவே இது குறைந்தபட்சமாகத் தோன்றினாலும் கூட அண்மைக் காலத்திலே சில ஆண்டுகளுக்கு முன்பு இது உயர்த்தப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே 4 ரூபாயாக இருந்தது, இப்போது 6 ரூபாயாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதேபோல் அவர்களுக்குத் தரப்படுகிற போக்குவரத்துச் செலவு என்ற அடிப்படையில் 20 கிலோ மீட்டர் வரை 16 ரூபாயும், 40 கிலோ மீட்டர் வரை 18 ரூபாயும் அதற்கு மேலே இருந்தால் 20 ரூபாயும் என்று அப்படியும் ஒரு தொகை வழங்கப்படுகிறது. எனவே, இதுபற்றி இப்போது உடனடியாக ஆராய்ந்து பதில் சொல்ல முடியாவிட்டாலும் தேவைப்படுகிறபோது ஆலோசிக்கப்படும்.

பொறியியல் படிப்பில் தடைமுறைக் கல்வி

*3418. திரு. கோ. வீரையன் :

திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொறியியல் (பி.இ.) படிக்கும் மாணவர்களுக்கு இடையில் புகுத்தப்பட்ட தடைமுறைக் கல்வியை நீக்கக் கோரி மாணவர்களிடமிருந்து அரசுக்கு ஏதும் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத்தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தடைமுறைக் கல்வியை நீக்குதல் என்பது பல்கலைக் கழக பாடத்திட்ட அமைப்பு குழுவின் பரிசீலனைக்கு உட்பட்டது.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு, உதாரணமாக பாலிடெக்னிக், ஐ.டி.ஐ.

மற்றும் வழக்கறிஞர்களுக்கு இப்படியெல்லாம் பல்வேறு துறைகளில் இருக்கக்கூடிய மாணவர்களுக்கு—இந்தத் தடைக் கல்வி முறை கொண்டு வரப்பட்டு இருந்தது. அதனால் அந்த மாணவர்கள் பெருமளவு பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருந்ததால், அதையெல்லாம் பரிசீலித்து, அந்தத் தடைகள் நீக்கப்பட்டு இருக்கின்றன. இந்த அரசு வந்ததற்குப் பிறகு, அதேபோல் இந்தப் பொறியியல் கல்லூரியிலே படிக்கக்கூடிய மாணவர்களுக்கு மட்டும் இந்தத் தடை இன்னும் தொடர்கிறது. மற்ற துறைகளில் அல்லது மற்ற கல்வி முறைகளில் மாற்றப்பட்டதைப் போல இந்தப் பொறியியல் கல்லூரியில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு இருக்கக்கூடிய இந்தத் தடைக் கல்வி முறையை நீக்க அரசு பரிசீலிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9-25 மணி

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பிரேக் சிஸ்டம் என்று சொல்லப்படுகிற இந்தத் தடை முறை என்பது படிப்பை ஊக்கப்படுத்துவதற்காகத்தான் பல்கலைக் கழக நிபுணர்களால் ஏற்கெனவே கொண்டுவரப்பட்டது. படிக்கின்ற அந்தக் காலத்திலேயே அவர்கள் தேர்ச்சி பெற வேண்டுமென்ற ஒரு ஊக்கம் அவர்களுக்கு இருக்க வேண்டுமென்றால் இரண்டு முறை மூன்று முறைதான், அதற்குப் பின்னர், தோல்வி அடைந்தால், தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டு மேல் வகுப்பிலே சேர்க்கப்பட வேண்டும் என்னும் ஒரு முறை உயர்ந்த நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டது. இருந்தாலும் கூட மாணவர்கள் தங்களுடைய இயலாமை காரணமாகவோ அல்லது சூழ்நிலை காரணமாகவோ இந்த நியாயமான தடை முறையை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. அவர்களுடைய விருப்பத்தைக் கருதி, பொறியியல் கல்லூரிகளைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே 3 முறை வரையில் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்று இருந்த அந்தக் கருத்து இப்போது 4 முறை வாய்ப்பு அளித்து வெற்றி பெற அனுமதிக்கலாம் என்று நான்காவது முறையும் பல்கலைக் கழகத்தினாலே ஏற்றுக் கொள்ளப்பட்டு, அண்ணா பல்கலைக் கழகத்தினாலே அந்த விதிமுறை நடைமுறைக்கு வந்திருக்கிறது. இதை மற்ற பல்கலைக் கழகங்களும் ஏற்றுக் கொள்வதற்கு, அந்தப் பல்கலைக் கழகங்கள் ஆலோசித்து வருகின்றன.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தடைக் கல்வி முறை என்பது பல்கலைக் கழகத்தால் விதிக்கப்பட்டது. மாணவர்களுடைய நலனைக் கருதித்தான் அது கொண்டு வரப்பட்டது என்று நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஏற்கெனவே இன்றைக்கு இந்த பொறியியல் கல்லூரிகளிலே படிக்கக் கூடிய மாணவர்களுக்கு ஆரம்பத்திலே படிக்கும்போது எந்தவிதமான வசதி வாய்ப்பும் கிடையாது. இன்றைக்கு பொறியியல்

1989 நவம்பர் 2]

கல்லூரி என்பது நாட்டில் காளான் மாதிரி உற்பத்தியாகிக் கொண்டு இருக்கிறது. இது ஒரு வணிக முறை போல இன்றைக்கு நடந்து கொண்டு இருக்கிறது. அவர்களுக்கு போதிய ஆசிரியர்கள் மற்ற பல வசதிகள் எல்லாம் இல்லாத ஒரு சூழ்நிலையில் அவர்கள் அந்தந்த வருடத்திற்கு உரிய பாடங்களை முடிப்பது என்பது மிக சிரமமான காரியம். அத்தோடு இநதக் கல்வியிலே சேர்ந்தவர்கள் வேறு ஒரு கல்விக்கும் போகவும் முடியாது. என்றைக்கு இருந்தாலும் அதை முடித்துத்தான் ஆக வேண்டும்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா மட்டும் கேளுங்கள்.

திரு. என். பழனிவேல் : அப்படி சிரமம் இருக்கிற காரணத்தால் அதை மீண்டும் இந்த அரசு பரிசிலனை செய்து, மீண்டும் பழைய முறைப்படி அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பாஸ் செய்வதற்கு அனுமதிக்கக் கூடிய முறையில் அதை மாற்றி அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் பாஸ் செய்வதற்கு அனுமதிக்க முடியுமா என்று கேட்டார்கள். அந்தத் தடை முறையே குறிப்பிட்ட காலத்திற்குள் பாஸ் செய்வதற்காகத்தான் முதலிலே கொண்டு வரப்பட்டது. இப்போது இருக்கிற பிரச்சினை, குறிப்பிட்ட காலத்திற்குள் பாஸ் செய்ய முடியாது என்று மாணவர்கள் சொல்லுகிறார்கள். அதற்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி பொறியியல் கல்லூரிகள் எல்லாம் தரமாக நடத்தப்படவில்லை என்றும், பல கல்லூரிகளில் தரம் குறைந்து இருக்கிறது—அதுவும் சுய நிதிக் கல்லூரிகளில்—என்று தெரிவித்தார்கள். இவற்றைப் பற்றி நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டு, அண்ணா பல்கலைக் கழக துணை வேந்தராக இருக்கிற டாக்டர் குழந்தைசாமி அவர்களுடைய தலைமையில் இந்த சுய நிதிக் கல்லூரிகள் எல்லாம் பார்வை இடப்பட்டு, அந்த அறிக்கை பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்ட நேரத்திலேதான் அகில இந்திய பொறியியல் ஆலோசனைக் குழுவாக அமைந்த ஒரு குழு தங்களுக்குத்தான் எல்லா அதிகாரங்களும் இருக்கின்றன என்று நீதிமன்றத்திலே வாதாடி, அவற்றை அனுமதிக்கிற அதிகாரமும், நிறுத்துகிற அதிகாரமும் தங்களுக்குத்தான் என்ற ஒரு தீர்ப்பையும் பெற்றிருக்கிறார்கள். எனவே மாநில அரசு நியாயமான சில நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்குக் கூட தடை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் கூட மாணவர்களுக்கு அந்தத் தடை முறை மூலமாக இடர்ப்பாடு இருக்கிறது என்ற வேண்டுகோள் வந்த காரணத்தால் 3 முறை அனுமதிக்கப்பட்டவர்கள் இனி 4 முறை அனுமதிக்கப்பட்டு தேர்வு எழு

தலாம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தாக பல்கலைக் கழகங்களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மூன்று முறை என்றால் $1\frac{1}{2}$ ஆண்டு, நான்கு முறை என்றால் 2 ஆண்டு. முதல் வகுப்பிலேயே தேறாமல் 3வது வகுப்பில் படித்துக் கொண்டு தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறது. அதற்கு மேல் அனுமதிக்க வேண்டுமானால், அதை விட அவர்கள் எல்லாம் தேர்விலே வெற்றி பெற்றதாக அறிவித்து விடலாம். அப்படியும் ஒரு முறை எதிர்காலத்திலே வந்தாலும் வரும்.

9-30 மணி

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாணபுமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இப்போது சொல்லும் போது மாணவர்களுக்கு இந்த தனியார் சுய நிதிக் கல்லூரி யிலே ஏற்பட்டிருக்கின்ற இடர்ப்பாடுகளைப் பற்றி, நீக்குவது பற்றிச் சொன்னார்கள். சமீபத்திலே ஓசூரிலே உள்ள அதியமான் தனியார் பொறியியல் கல்லூரியிலே 2 ஆண்டுகள் படித்து முடித்த 109 மாணவர்கள் வரை சேர முடியாமலும் போக முடியாமலும் ஏதோ தடங்கல் ஏற்பட்டு அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி கோர்ட் மூலமாகத்தடங்கல் ஏற் பட்டு விலகியிருக்கிறார்களே, அந்த மாணவர்களுடைய படிப்பு எல்லாம் வீணாகிக் கொண்டிருக்கிறதே, அதற்கு வேறு ஏதாவது ஏற்பாடு செய்து வேறு கல்லூரியிலே சேர் வதற்குண்டான ஏற்பாடாவது செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர் களே, இது நீதிமன்றத்தோடு தொடர்புடைய ஒரு பிரச் சினையாக அண்மையிலே ஆக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பட்ட மாணவர்களை வேறு கல்லூரியிலே சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று ஒரு விண்ணப்பம் போடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் அந்த கல்லூரி இயங்கலாம் என்ற ஒரு கருத்தும் தெரிவிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படி ஒரு நிலைமை எதிர்பாராத விதமாக உருவாக்கப் பட்டு இருக்கிற காரணத்தால் தேவைப்படுகிற போது அரசு அதுகுறித்து பரிசீலனை செய்ய முடியுமே தவிர உடனடியாக ஒரு முடிவிற்கு வரக்கூடிய வாய்ப்பு இல்லை.

பல்கலைக் கழகங்களுக்கு ஒரே மாதிரியான சட்டங்கள்.

*5328. திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;